©
தமிழ்நாடு அரசு
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ.12.00 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 36] சென்னை, புதன்கிழமை, செப்டம்பர் 6, 2017
ஆவணி 21, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2016–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண் 1/2016.**

**1955–ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடுச் சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) மாநில அரசு அறிவிக்கையினால் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் XIV/1955.

74–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. இதன் பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான 1955–ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடுச் சட்டத்தின் 74–ஆம் பிரிவில் ஓரத்தலைப்பு உள்ளடங்கலாக "முத்திரைத்தாள்கள்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "முத்திரைத்தாள்கள் அல்லது மின்னணு–முத்திரைத்தாள்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

75–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 75–ஆம் பிரிவில் "அல்லது பகுதி அளவில் பதிவு செய்யப்படுதலோ மற்றும் பகுதி அளவில் பசை நாடா ஒட்டுதல்" என்கின்ற சொற்றொடருக்குப் பின்பு "அல்லது மின்னணு–முத்திரைத்தாள்" என்ற சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சு.ச. பூவலிங்கம்,**
*அரசுச் செயலாளர் (பொறுப்பு),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2016—ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27—ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண் 2/2016.**

## 2012—ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்

இந்தியக் குடியரசின் அறுபத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம், 2016—ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும் . குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, மாநில அரசால் அறிவிக்கையின் வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 21/2012. 2012 – ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 41 ஆம் பிரிவில்,— 41 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) 2 ஆம் பிரிவிற்குரிய வரம்புரைக்குப் பதிலாக பின்வரும் வரம்புரை அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:—

**வரம்புரை:** ஆனால் கல்வி அலுவற்பணிகள் தவிர பிற பொருட்பாடுகளுக்குத் தொடர்பான நிலையமைவிதி எதனின் அல்லது நிலையமைவிதி ஒன்றின் திருத்தம் அல்லது நீக்கறவு எதனின் வரைவினையும் கொண்டு வரக்கூடாது.

(2) (4) ஆம் உட்பிரிவிற்குப் பின்பு பின்வரும் உட்பிரிவு சேர்க்கப்படுதல் வேண்டும். அதாவது:—

“(5) குழுமத்தால் நிறைவேற்றப்பட்ட நிலையமைவிதி ஒன்று வேந்தரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அதற்கு வேந்தர் ஒப்புதல் வழங்கலாம் அல்லது அவருடைய ஒப்புதலை வழங்காமல் நிறுத்தி வைக்கலாம். குழுமத்தால் நிறைவேற்றப்பட்ட நிலையமை விதி ஒன்று வேந்தரால் ஒப்புதல் வழங்கப்படும் வரை, அது செல்லுந்தன்மையுடையதாக இருக்காது”.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சு.ச. பூவலிங்கம்,**
*அரசுச் செயலாளர் (பொறுப்பு),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2016–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–

சட்ட எண் 3/2016.

## 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது 2007–ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 32/2006.

19–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் 19–ஆம் பிரிவில், (20)–ஆம் உட்பிரிவுக்குப் பின், பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"(21) (2)–ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும், மொத்தம் அல்லது நிகர விற்றுமுதல் வரியினை திருப்பிக் கொடுக்கும் வடிவத்திலான தொழில் முதலீட்டு வளர்ச்சி மானியமாகவோ அல்லது எளிய கடனாகவோ அரசால் ஒப்பளிப்பு செய்யப்படும் நிதி ஊக்கத் தொகையினை பயன்படுத்திக்கொள்ளும் பதிவு பெற்ற வணிகர் ஒருவரிடமிருந்து மாநிலத்திற்குள் பொருட்களை கொள்முதல் செய்யும் நேர்வில் மாநிலத்திற்குள் அல்லது மாநிலத்திற்கிடையேயான வர்த்தகம் அல்லது வணிகத்தின்போது அத்தகைய பொருட்களின் மறு விற்பனை மற்றும் அத்தகைய பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்யும் போது செலுத்தப்பட்ட மொத்த விற்றுமுதல் வரி அளவிற்கு மட்டுமே உள்ளீட்டு வரி வரவு அனுமதிக்கப்படும்.".

(ஆளுநரின் ஆணைப்படி)

**சு.ச. பூவலிங்கம்,**
*அரசுச் செயலாளர் (பொறுப்பு),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2016–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–

சட்ட எண் 4/2016.

**தமிழ்நாடு மாநிலத்தில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப்பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக.–

**பகுதி–I.**

**முன்னுரை.**

**1. (1)** இந்தச் சட்டம், 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு.

**பகுதி II.**

**1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் IV/1919.

**2.** 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் ,— 5 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (4) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (5) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**பகுதி III.**

**1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 15/1971.

**3.** 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் ,— 5 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (4) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (5) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**பகுதி IV.**

**1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 25/1981.

**4.** 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் ,— 5 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (4) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (5) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**பகுதி V.**

**1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

தமிழ்நாடு சட்டம் V/1920.

**5.** (இதன் பின்பு இந்த பகுதியில் 1920 ஆம் ஆண்டு சட்டம் என சுட்டப்படுவதான) 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 3–W ஆம் பிரிவில் ,— 3–W ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (2) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (3) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (4) ஆம் உட்பிரிவின், (b) கூறில் ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (5) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

7 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**6.** 1920 ஆம் ஆண்டு சட்டத்தின் 7 ஆம் பிரிவில் ,—

(1) (6) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (7) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (8) ஆம் உட்பிரிவில், (b) கூறில் ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (9) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி VI.

## 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தம் மற்றும் சிறப்பு வகையம்) சட்டத்திற்கான திருத்தம்.

121 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**7.** 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தம் மற்றும் சிறப்பு வகையம்) சட்டத்தின் 121 ஆம் பிரிவில், (b) கூறில் ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 26/1994.

## பகுதி VII.

## 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

5 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**8.** 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் ,— தமிழ்நாடு சட்டம் 27/1994.

(1) (4) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (5) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி VIII.

## 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

5 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**9.** 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் ,— தமிழ்நாடு சட்டம் 28/1994.

(1) (4) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (5) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி IX.

## 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

5 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**10.** 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் ,— தமிழ்நாடு சட்டம் 29/1994.

(1) (4) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (5) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி X.

## 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 7/2008.

5 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**11.** 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் ,—

(1) (5) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (6) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி XI.

## 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 8/2008.

5 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**12.** 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் ,—

(1) (5) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (6) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி XII.

## 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 26/2008.

5 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**13.** 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் ,—

(1) (5) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (6) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி XIII.

## 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 27/2008.

5 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**14.** 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் ,—

(1) (5) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (6) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி XIV.

## 2013 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 24/2013.

5 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**15.** 2013 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் ,—

(1) (5) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (6) ஆம் உட்பிரிவில், ‘‘மூன்றில் ஒரு பங்கு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐம்பது விழுக்காடு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி XV.

## 2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

5 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**16.** 2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டத்தின் **5** ஆம் பிரிவில் ,— தமிழ்நாடு சட்டம் 25/2013.

(1). (5) ஆம் உட்பிரிவில், ''மூன்றில் ஒரு பங்கு'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''ஐம்பது விழுக்காடு'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2). (6) ஆம் உட்பிரிவில், ''மூன்றில் ஒரு பங்கு'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''ஐம்பது விழுக்காடு'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சு.ச. பூவலிங்கம்,**
*அரசுச் செயலாளர் (பொறுப்பு),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2016–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண் 5/2016.**

## 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**1.** இந்தச் சட்டம், 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் என்று அழைக்கப்பெறும். குறுந்தலைப்பு

**2.** (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 11–ஆம் பிரிவில்,– (தமிழ்நாடு சட்டம் 21/1994.) (11 ஆம் பிரிவிற்கான திருத்தம்.)

(1) (2) ஆம் உட்பிரிவில், ''மூன்றில் ஒரு பங்கு'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஐம்பது விழுக்காடு'' எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும் ;

(2) (3) ஆம் உட்பிரிவில் ''மூன்றில் ஒரு பங்கு'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஐம்பது விழுக்காடு'' எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 20–ஆம் பிரிவில்,– (20–ஆம் பிரிவிற்கான திருத்தம்.)

(1) (2) ஆம் உட்பிரிவில், ''மூன்றில் ஒரு பங்கு'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஐம்பது விழுக்காடு'' எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும் ;

(2) (3) ஆம் உட்பிரிவில் ''மூன்றில் ஒரு பங்கு'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஐம்பது விழுக்காடு'' எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**4.** முதன்மைச் சட்டத்தின் 32–ஆம் பிரிவில்,– (32–ஆம் பிரிவிற்கான திருத்தம்.)

(1) (2) ஆம் உட்பிரிவில், ''மூன்றில் ஒரு பங்கு'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஐம்பது விழுக்காடு'' எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும் ;

(2) (3) ஆம் உட்பிரிவில் ''மூன்றில் ஒரு பங்கு'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஐம்பது விழுக்காடு'' எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**5.** முதன்மைச் சட்டத்தின் 57 ஆம் பிரிவில்,– (57–ஆம் பிரிவிற்கான திருத்தம்.)

(1) (1–A) எனும் உட்பிரிவில், ''மூன்றில் ஒரு பங்கு'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஐம்பது விழுக்காடு'' எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும் ;

(2) (1–D) ஆம் உட்பிரிவில் ''மூன்றில் ஒரு பங்கு'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஐம்பது விழுக்காடு'' எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சு.ச. பூவலிங்கம்,**
*அரசுச் செயலாளர் (பொறுப்பு),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2016—ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29—ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண் 8/2016.**

## தமிழ்நாடு மாநிலத்தில் மாநகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:—

### பகுதி – I

### முன்னுரை

1. இந்தச் சட்டம் 2016—ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்தச்) சட்டம் என்று அழைக்கப்பெறும். குறுந்தலைப்பு.

### பகுதி – II

### 1919—ஆம் ஆண்டு சென்னை நகர மாநகராட்சி சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் IV /1919

2. (இதன் பின்பு இந்தப்பகுதியில் 1919—ஆம் ஆண்டு சட்டமாக குறிப்பிடப்படுவதான), 1919—ஆம் ஆண்டு சென்னை நகர மாநகராட்சிச் சட்டத்தின் 28—ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது; 28—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

‘‘**28. மேயருக்கான தேர்தல்.**— (1) மாமன்றம், மாமன்றத்திற்கான ஒவ்வொரு சாதாரண தேர்தலுக்குப் பின்பு அதனுடைய முதல் கூட்டத்தில் மாமன்றத்தின் உறுப்பினர்களில் ஒருவரை மேயராகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(2) மேயர் அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் காலத்திற்குப் பதவி வகிப்பார் மற்றும் அவர் மேயராகத் தொடர்ந்திருப்பார், வரம்புரையாக இடைப்பட்ட காலத்தில் அவருடைய மாமன்ற உறுப்பினர் பதவி அற்றுப் போகாது.

(3) மேயர் பதவியில் காலியிடம் எதுவும் ஏற்படுவதன் பேரில், மாமன்றமானது, வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்கு அடுத்து வருபவரை தேர்ந்தெடுத்தல் வேண்டும். அவர் எந்த நபருக்கு பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாரோ அந்த நபர், அக்காலியிடம் ஏற்படாதிருந்திருக்குமாயின் அதனை வகிப்பதற்கு உரிமைத் தகுதி கொண்டிருக்கக்கூடிய கால அளவு வரையில் பதவி வகிப்பதற்கு உரிமைத் தகுதி கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(4) மேயர் ஒருவர் அப்பதவியை வகிப்பதற்கு அவர் தகுதிக்கேடுடையவராக ஆவதன் பேரில் அல்லது அவர் பதவியிலிருந்து அகற்றப்படுவதன் பேரில் அல்லது அவரது பதவி காலம் முடிவுறுவதன்பேரில் அல்லது பிறவாராக மேயராக தாம் இருப்பது அற்றுப் போவதன்பேரில் தம் பதவியை விட்டகன்றிருப்பதாகக் கொள்ளப்படுவார்.

**3.** 1919—ஆம் ஆண்டு சட்டத்தின் 44—AC பிரிவில், — 44-AC பிரிவிற்கான திருத்தம்.

(1) ஓரத் தலைப்பில் ‘‘துணை மேயர்’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘மேயர் அல்லது துணை மேயர்’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) 1—ஆம் உட்பிரிவில் ‘‘துணை மேயர்’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘மேயர் அல்லது துணை மேயர்’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(3) 12—ஆம் உட்பிரிவில் ‘‘துணை மேயர்’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘மேயர் அல்லது துணை மேயர்’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(4) 13—ஆம் உட்பிரிவில் ‘‘துணை மேயர்’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘மேயர் அல்லது துணை மேயர்’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(5) 14—ஆம் உட்பிரிவில் ‘‘ஒரு துணை மேயர்’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘ஒரு மேயர் அல்லது ஒரு துணை மேயர்’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

59–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**4.** 1919–ஆம் ஆண்டு சட்டத்தின் 59–ஆம் பிரிவில் (2)–ஆம் உட்பிரிவில் (c) கூறில் ‘‘மாமன்ற உறுப்பினா்’’ அல்லது மேயா்’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘மாமன்ற உறுப்பினா்’’ என்ற சொற்றொடா் அமைக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி–III

## 1971–ஆம் ஆண்டு மதுரை நகர மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

29–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** (இதன் பின்பு இந்தப்பகுதியில் 1971–ஆம் ஆண்டு சட்டமாக குறிப்பிடப்படுவதான), 1971–ஆம் ஆண்டு மதுரை நகர மாநகராட்சிச் சட்டத்தின் 29–ஆம் பிரிவிற்காக பின்வரும் பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:– தமிழ்நாடு சட்டம் 15/1971.

**“29. மேயருக்கான தோ்தல்.–** (1) மாமன்றம் , மாமன்றத்திற்கான ஒவ்வொரு சாதாரண தோ்தலுக்குப் பின்பு அதனுடைய முதல் கூட்டத்தில் மாமன்றத்தின் உறுப்பினா்களில் ஒருவரை மேயராகத் தோ்ந்தெடுக்க வேண்டும்.

(2) மேயா் அவா் தோ்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் காலத்திற்குப் பதவி வகிப்பாா் மற்றும் அவா் மேயராகத் தொடா்ந்திருப்பாா், வரம்புரையாக இடைப்பட்ட காலத்தில் அவருடைய மாமன்ற உறுப்பினா் பதவி அற்றுப் போகாது.

(3) மேயா் பதவியில் காலியிடம் எதுவும் ஏற்படுவதன் பேரில், மன்றமானது, வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்கு அடுத்து வருபவரை தோ்ந்தெடுத்தல் வேண்டும். அவா் எந்த நபருக்கு பதிலாக தோ்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாரோ அந்த நபா், அக்காலியிடம் ஏற்படாதிருந்திருக்குமாயின் அதனை வகிப்பதற்கு உரிமைத் தகுதி கொண்டிருக்கக்கூடிய கால அளவு வரையில் பதவி வகிப்பதற்கு உரிமைத் தகுதி கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(4) மேயா் ஒருவா் அப்பதவியை வகிப்பதற்கு அவா் தகுதிக்கேடுடையவராக ஆவதன் பேரில் அல்லது அவா் பதவியிலிருந்து அகற்றப்படுவதன் பேரில் அல்லது அவரது பதவி காலம் முடிவுறுவதன்பேரில் அல்லது பிறவாராக மேயராக தாம் இருப்பது அற்றுப் போவதன்பேரில் தம் பதவியை விட்டகன்றிருப்பதாகக் கொள்ளப்படுவாா்.

44-AB பிரிவிற்கான திருத்தம்.

**6.** 1971–ஆம் ஆண்டு சட்டத்தின் 48–AB பிரிவில், –

(1) ஓரத் தலைப்பில் ‘‘துணை மேயா்’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘மேயா் அல்லது துணை மேயா்’’ என்ற சொற்றொடா் அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) 1–ஆம் உட்பிரிவில் ‘‘துணை மேயா்’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘மேயா் அல்லது துணை மேயா்’’ என்ற சொற்றொடா் அமைக்கப்படுதல் வேண்டும்.

(3) 12–ஆம் உட்பிரிவில் ‘‘துணை மேயா்’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘மேயா் அல்லது துணை மேயா்’’ என்ற சொற்றொடா் அமைக்கப்படுதல் வேண்டும்.

(4) 13–ஆம் உட்பிரிவில் ‘‘துணை மேயா்’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘மேயா் அல்லது துணை மேயா்’’ என்ற சொற்றொடா் அமைக்கப்படுதல் வேண்டும்.

(5) 14–ஆம் உட்பிரிவில் ‘‘ஒரு துணை மேயா்’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘ஒரு மேயா் அல்லது ஒரு துணை மேயா்’’ என்ற சொற்றொடா் அமைக்கப்படுதல் வேண்டும்.

66–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**7.** 1971–ஆம் ஆண்டு சட்டத்தின் 66–ஆம் பிரிவில் (2)–ஆம் உட்பிரிவில் (b) கூறில் ‘‘மாமன்ற உறுப்பினா் அல்லது மேயா்’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘மாமன்ற உறுப்பினா்’’ என்ற சொற்றொடா் அமைக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி–IV

## 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூா் நகர மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்

29–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**8.** (இதன் பின்பு இந்தப்பகுதியில் 1981–ஆம் ஆண்டு சட்டமாக குறிப்பிடப்படுவதான), 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூா் நகர மாநகராட்சிச் சட்டத்தின் 29–ஆம் பிரிவிற்காக பின்வரும் பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:– தமிழ்நாடு சட்டம் 25/1981.

**“29. மேயருக்கான தோ்தல்.–** (1) மாமன்றம், மாமன்றத்திற்கான ஒவ்வொரு சாதாரண தோ்தலுக்குப் பின்பு அதனுடைய முதல் கூட்டத்தில் மாமன்றத்தின் உறுப்பினா்களில் ஒருவரை மேயராகத் தோ்ந்தெடுக்க வேண்டும்.

(2) மேயர் அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் காலத்திற்குப் பதவி வகிப்பார் மற்றும் அவர் மேயராகத் தொடர்ந்திருப்பார், வரம்புரையாக இடைபட்ட காலத்தில் அவருடைய மாமன்ற உறுப்பினர் பதவி அற்றுப் போகாது.

(3) மேயர் பதவியில் காலியிடம் எதுவும் ஏற்படுவதன் பேரில், மன்றமானது, வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்கு அடுத்து வருபவரை தேர்ந்தெடுத்தல் வேண்டும். அவர் எந்த நபருக்கு பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாரோ அந்த நபர், அக்காலியிடம் ஏற்படாதிருந்திருக்குமாயின் அதனை வகிப்பதற்கு உரிமைத் தகுதி கொண்டிருக்கக்கூடிய கால அளவு வரையில் பதவி வகிப்பதற்கு உரிமைத் தகுதி கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(4) மேயர் ஒருவர் அப்பதவியை வகிப்பதற்கு அவர் தகுதிக்கேடுடையவராக ஆவதன் பேரில் அல்லது அவர் பதவியிலிருந்து அகற்றப்படுவதன் பேரில் அல்லது அவரது பதவி காலம் முடிவுறுவதன்பேரில் அல்லது பிறவாராக மேயராக தாம் இருப்பது அற்றுப் போவதன்பேரில் தம் பதவியை விட்டகன்றிருப்பதாகக் கொள்ளப்படுவார்.

**9.** 1981–ஆம் ஆண்டு சட்டத்தின் 50–C பிரிவில், – (1) ஓரத் தலைப்பில் ''துணை மேயர்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மேயர் அல்லது துணை மேயர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) 1–ஆம் உட்பிரிவில் ''துணை மேயர்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மேயர் அல்லது துணை மேயர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(3) 12–ஆம் உட்பிரிவில் ''துணை மேயர்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மேயர் அல்லது துணை மேயர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(4) 13–ஆம் உட்பிரிவில் ''துணை மேயர்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மேயர் அல்லது துணை மேயர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(5) 14–ஆம் உட்பிரிவில் ''ஒரு துணை மேயர்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஒரு மேயர் அல்லது ஒரு துணை மேயர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**10.** 1981–ஆம் ஆண்டு சட்டத்தின் 68–ஆம் பிரிவில் (2)–ஆம் உட்பிரிவில் (b) கூறில் ''மாமன்ற உறுப்பினர் அல்லது மேயர்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மாமன்ற உறுப்பினர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

68–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சு.ச. பூவலிங்கம்,**
*அரசுச் செயலாளர் (பொறுப்பு),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2016–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–

சட்ட எண் 9/2016.

## தமிழ்நாடு மாநிலத்தில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

### பகுதி–I.

### முன்னுரை.

1. (1) இந்தச் சட்டம், 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

### பகுதி II.

### 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம். .

தமிழ்நாடு சட்டம் IV/1919.

2. 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 46–AAA ஆம் பிரிவிற்குப்பின், பின்வரும் பிரிவு சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:— பிரிவு 46-AAAA. புதிதாக சேர்த்தல்.

“**46-AAAA. தேர்தல் தொடர்பான தனி வகை முறை.–** இந்தச் சட்டத்திலோ அல்லது இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளிலோ அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளிலோ என்ன அடங்கியிருந்த போதிலும், 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதிக்குப் பின்னர் உடனடியாக நடத்தப்படவேண்டிய மன்றத்திற்கான முதல் தேர்தலுக்காக மாநகர கோட்டங்களில் ஆட்சி நிலவரைப் பகுதி, கோட்டங்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் அத்தகைய கோட்டங்களிலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பப்படவேண்டிய மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை ஆகியவை 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதியன்று இருந்தவாறே இருத்தல் வேண்டும்.”.

### பகுதி III.

தமிழ்நாடு சட்டம் 15/1971.

### 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

3. 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 50–AA ஆம் பிரிவிற்குப்பின், பின்வரும் பிரிவு சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:— பிரிவு 50-AAA. புதிதாக சேர்த்தல்.

“ **50- AAA. தேர்தல் தொடர்பான தனி வகை முறை.–** இந்தச் சட்டத்திலோ அல்லது இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளிலோ அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளிலோ என்ன அடங்கியிருந்த போதிலும், 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதிக்குப் பின்னர் உடனடியாக நடத்தப்படவேண்டிய மன்றத்திற்கான முதல் தேர்தலுக்காக மாநகரப் பிரிவுகளில் ஆட்சி நிலவரைப் பகுதி, பிரிவுகளின் மொத்த எண்ணிக்கை மற்றும் அத்தகைய பிரிவுகளிலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பப்படவேண்டிய மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை ஆகியவை 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதியன்று இருந்தவாறே இருத்தல் வேண்டும்.”.

### பகுதி IV.

தமிழ்நாடு சட்டம் 25/1981.

### 1981 – ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

4. 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் 52–AA ஆம் பிரிவிற்குப்பின், பின்வரும் பிரிவு சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:— பிரிவு 52-AAA. புதிதாக சேர்த்தல்.

“**52- AAA. தேர்தல் தொடர்பான தனி வகை முறை.–** இந்தச் சட்டத்திலோ அல்லது இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளிலோ அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளிலோ

என்ன அடங்கியிருந்த போதிலும், **2016—**ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதிக்குப் பின்னர் உடனடியாக நடத்தப்படவேண்டிய மன்றத்திற்கான முதல் தேர்தலுக்காக மாநகரக் கோட்டங்களில் ஆட்சி நிலவரைப் பகுதி, கோட்டங்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் அத்தகைய கோட்டங்களிலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பப்படவேண்டிய மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை ஆகியவை **2016—**ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதியன்று இருந்தவாறே இருத்தல் வேண்டும்.''.

## பகுதி V.

## 1920 —ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தங்கள்.

பிரிவு 43-AAAA. புதிதாக சேர்த்தல்.

**5.** 1920—ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் **43—**AAA ஆம் பிரிவிற்குப்பின், பின்வரும் பிரிவு சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:— தமிழ்நாடு சட்டம் V/1920.

**"43-AAAA. தேர்தல் தொடர்பான தனி வகைமுறை.—** இந்தச் சட்டத்திலோ அல்லது இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளிலோ அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளிலோ என்ன அடங்கியிருந்த போதிலும், **2016—**ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதிக்குப் பின்னர் உடனடியாக நடத்தப்பட வேண்டிய நகராட்சி மன்றங்களுக்கான முதல் தேர்தலுக்காக, நகராட்சி மன்றத்தின் பிரிவுகளில் ஆட்சி நிலவரைப் பகுதி, பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் பிரிவுகளிலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பப்பட வேண்டிய மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை ஆகியவை, **2016—**ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதியன்று இருந்தவாறு இருத்தல் வேண்டும்.''.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சு.ச. பூவலிங்கம்,**
*அரசுச் செயலாளர் (பொறுப்பு),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2016–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண் 10/2016.**

## 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம், 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 21/1994. 2. 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 28–AA பிரிவுக்குப்பின்பு பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும். அதாவது:– 28–AAA எனும் புதிய பிரிவு புகுத்துதல்.

**"28–AAA தேர்தல் தொடர்பான சிறப்பு வகைமுறை.–** இந்தச் சட்டத்தில் அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளில் அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளில் என்ன அடங்கியிருந்த போதிலும், 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதிக்குப் பின்னர் உடனடியாக நடத்தப்பட வேண்டிய கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றிய மன்றங்கள், மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றிற்கான முதல் தேர்தலுக்காக சிற்றொகுதிகளின் ஆட்சி நிலவரைபகுதி ஒவ்வொரு கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சியிலும் உள்ள சிற்றொகுதிகளின் எண்ணிக்கை அத்தகைய சிற்றொகுதி ஒவ்வொன்றினாலும் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆகியன 2016–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதியன்று இருக்கின்றவாறே இருத்தல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சு.ச. பூவலிங்கம்,**
*அரசுச் செயலாளர் (பொறுப்பு),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2016—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14—ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண் 12/2016.**

**1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசினால் அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் V/1920.

3-T எனும் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 3-Tஎனும் பிரிவிலுள்ள (1) ஆம் உட்பிரிவில் “(அதனுடைய தலைவர் நீங்கலாக)'' எனும் சொற்றொடர் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

7ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 7ஆம் பிரிவிலுள்ள (1) ஆம் உட்பிரிவில் “(அதனுடைய தலைவர் நீங்கலாக)'' எனும் சொற்றொடர் நீக்கப்படுதல் வேண்டும்.

7-A எனும் பிரிவிற்கான மாற்றாக்கம்.

4. முதன்மைச் சட்டத்தின் 7-A எனும் பிரிவிற்காக, பின்வரும் பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

**“7-A. தலைவருக்கான தேர்தல்.-**

(1) மன்றத்திற்கான ஒவ்வொரு சாதாரண தேர்தலுக்குப் பின்பு கூடும் முதல் கூட்டத்தில், ஒரு மன்ற உறுப்பினர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(2) தலைவர் தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டுக் கால அளவிற்கு பதவி வகித்தல் வேண்டும் மற்றும் அத்தகைய தலைவராகத் தொடர்ந்து இருத்தல் வேண்டும். வரம்புரையாக, இடைப்பட்ட காலத்தில் அவர் மன்ற உறுப்பினராக இருப்பது அற்றுப் போகாது.

(3) தலைவரின் அலுவலகத்தில் ஏற்படும் தற்செயலான காலியிடம் எதுவும் புதிய தேர்தல் ஒன்றின் மூலம் நிரப்பப்பட வேண்டும் மற்றும் அத்தகைய காலியிடத்திற்கு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் ஒருவர், உடனடியாக பதவி ஏற்க வேண்டும். ஆனால், காலியிடம் ஏற்படாதிருந்திருந்தால் எவருடைய காலியிடத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரோ அவர் எவ்வளவு காலத்திற்கு அவ்வாறு பதவி வகிப்பதற்கு உரிமைத்தகுதியுடையவராக இருந்திருப்பாரோ அவ்வளவு காலத்திற்கு பதவி வகித்தல் வேண்டும்.

(4) தலைவர் ஒருவர் அப்பதவி வகிப்பதற்கு தகுதிகேடுற்றவராக ஆவதன் பேரில் அல்லது அவர் பதவியிலிருந்து அகற்றப்படுவதன் பேரில் அல்லது அவரது பதவிக் காலம் முடிவுறுதலின் பேரில் அல்லது பிறவாறாக தலைவராக தாம் இருப்பது அற்றுப் போவதன் பேரில் தம் பதவியை விட்டு அகன்றிருப்பதாகக் கொள்ளப்படுவார்.”.

8 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

5. முதன்மைச் சட்டத்தில் 8 ஆம் பிரிவில்,-

(1) ஓரத்தலைப்பில் “தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்கள்” என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக “மன்ற உறுப்பினர்கள்” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவில், “தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள்” என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக “மன்ற உறுப்பினர்கள்” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (2) ஆம் உட்பிரிவில், “தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள்” என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக “மன்ற உறுப்பினர்கள்” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (2-A) எனும் உட்பிரிவு விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(5) (3) ஆம் உட்பிரிவில், "தலைவர் அல்லது மன்ற உறுப்பினர் ஒருவர்," என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "மன்ற உறுப்பினர் ஒருவர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(6) (4) ஆம் உட்பிரிவில், ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினர் ஒருவர்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "மன்ற உறுப்பினர் ஒருவர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(7) (5) ஆம் உட்பிரிவில், "தலைவர் அல்லது மன்ற உறுப்பினர் ஒருவர்" மற்றும் "அந்த தலைவர் அல்லது அந்த மன்ற உறுப்பினர்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''மன்ற உறுப்பினர் ஒருவர்'' மற்றும் ''அந்த மன்ற உறுப்பினர்" என்ற சொற்றொடர் முறையே அமைக்கப்படுதல் வேண்டும்.

9 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

6. முதன்மைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவில்,-

(1) ஓரத்தலைப்பில் ''தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "மன்ற உறுப்பினர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (1) ஆம் உட்பிரிவில், "தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "மன்ற உறுப்பினர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (3) ஆம் உட்பிரிவில், "(1) ஆம் உட்பிரிவின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் ஒருவர் அல்லது மன்ற உறுப்பினர் ஒருவர்'', என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, "(1) ஆம் உட்பிரிவின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற உறுப்பினர் ஒருவர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

12 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

7. முதன்மைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவில், (4) ஆம் உட்பிரிவு விட்டுவிடப்படுதல் வேண்டும்.

12-A எனும் பிரிவிற்கான மாற்றாக்கம்.

8. முதன்மைச் சட்டத்தின் 12-A எனும் பிரிவிற்குப் பதிலாக பின்வரும் பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

''12-A. **தலைவர் அல்லது துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படாதபொழுது நடைமுறை.-**

7–A அல்லது 12–ஆம் பிரிவின்படி நடத்தப்பட்ட தேர்தல் ஒன்றில் தலைவர் அல்லது நேர்விற்கேற்ப துணைத் தலைவர் எவரும் தேர்ந்தெடுக்கப்படாதபொழுது, புதிய தேர்தல் ஒன்று நடத்தப்படுதல் வேண்டும்.".

14 ஆம் பிரிவிற்கான மாற்றாக்கம்.

9. முதன்மைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"14. **தலைவர் மன்றத்தின் ஒவ்வொரு குழுவின் உறுப்பினராகவும் இருத்தல்.–** தலைவர் அவருடைய அலுவலகப் பதவி வழியாக மன்றத்தினுடைய ஒவ்வொரு குழுவின் உறுப்பினராக இருப்பார்.''.

30 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

10. முதன்மைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவில்,–(1) ஓரத்தலைப்பில், ''தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "மன்ற உறுப்பினர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (1) ஆம் உட்பிரிவில், "தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "மன்ற உறுப்பினர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

40 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

11. முதன்மைச் சட்டத்தின் 40 ஆம் பிரிவில் ஓரத்தலைப்பு உள்ளடங்கலான "துணைத் தலைவர்" எனும் சொற்றொடர் எங்கெல்லாம் வருகிறதோ அங்கெல்லாம் அதற்கு பதிலாக "தலைவர் அல்லது துணைத் தலைவர்" எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

40-A எனும் பிரிவிற்கான திருத்தம்.

12. முதன்மைச் சட்டத்தின் 40-A எனும் பிரிவில்,-

(1) ஓரத்தலைப்பில், "துணைத் தலைவர்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "தலைவர் அல்லது துணைத் தலைவர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (1) ஆம் உட்பிரிவில், "துணைத் தலைவர்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "தலைவர் அல்லது துணைத் தலைவர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (12) ஆம் உட்பிரிவில், "துணைத் தலைவர்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "தலைவர் அல்லது நேர்வுக்கேற்ப துணைத் தலைவர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (13) ஆம் உட்பிரிவில், "துணைத் தலைவர்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "தலைவர் அல்லது துணைத் தலைவர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(5) (14) ஆம் உட்பிரிவில் "துணைத் தலைவர் ஒருவர்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "தலைவர் ஒருவர் அல்லது துணைத் தலைவர் ஒருவர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

13. முதன்மைச் சட்டத்தின் 40-B எனும் பிரிவு விட்டுவிடப்படுதல் வேண்டும். 40-B எனும் பிரிவை விட்டுவிடுதல்.

14. முதன்மைச் சட்டத்தின் 43-C எனும் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில்,- 43-C எனும் பிரிவிற்கான திருத்தம்.

(1) "தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்கள்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "மன்ற உறுப்பினர்கள்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) "தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "மன்ற உறுப்பினர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

15. முதன்மைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவில் இரண்டு இடங்களில் வருகின்ற "தலைவர் அல்லது மன்ற உறுப்பினர் ஒருவராக" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "மன்ற உறுப்பினர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும். 48 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

16. முதன்மைச் சட்டத்தின் 49 ஆம் பிரிவில்.– 49 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (1) ஆம் உட்பிரிவில் "தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "மன்ற உறுப்பினர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (1-A) எனும் உட்பிரிவில், "தலைவர் ஒருவராக அல்லது தேர்தல் மன்ற உறுப்பினர் ஒருவராக" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "மன்ற உறுப்பினர் ஒருவராக" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (2) ஆம் உட்பிரிவில்,

(a) முதலாவதாக வரக்கூடிய பகுதியில், "தலைவர் ஒருவராக அல்லது தேர்தல் மன்ற உறுப்பினராக" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "மன்ற உறுப்பினர் ஒருவராக" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) (e) எனும் கூறில் இரண்டு இடங்களில் வருகின்ற "அந்தத் தலைவர் அல்லது மன்ற உறுப்பினர் ஒருவர்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "மன்ற உறுப்பினர் ஒருவர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

17. முதன்மைச் சட்டத்தின் 50 ஆம் பிரிவில்,- 50 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) ஓரத்தலைப்பில், "தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்கள்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "மன்ற உறுப்பினர்கள்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (1) ஆம் உட்பிரிவில்,-

(a) முதலாவதாக வரக்கூடிய பகுதியில், "அந்தத் தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "மன்ற உறுப்பினர் ஒருவர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) (f) எனும் கூறில், "அந்தத் தலைவர் அல்லது பிற மன்ற உறுப்பினர் எவரும்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "பிற மன்ற உறுப்பினர் எவரின்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(c) (i) எனும் கூறில்,- (i) “தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்” என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக “மன்ற உறுப்பினர்” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) வரம்புரையில், “அந்தத் தலைவர் அல்லது மன்ற உறுப்பினர் ஒருவர்” என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக “மன்ற உறுப்பினர் ஒருவர்” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (4) ஆம் உட்பிரிவில்,-

(a) “அந்தத் தலைவர் அல்லது மன்ற உறுப்பினர் ஒருவர்” என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக “மன்ற உறுப்பினர் ஒருவர்” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) “தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்” என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக “மன்ற உறுப்பினர்” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(c) வரம்புரையில், “அந்தத் தலைவர் அல்லது மன்ற உறுப்பினர் ஒருவர்” என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக “மன்ற உறுப்பினர் ஒருவர்” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

51 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

18. முதன்மைச் சட்டத்தின் 51 ஆம் பிரிவில்.-

(1) ஓரத்தலைப்பில், “தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்” என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக “மன்ற உறுப்பினர்” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (1) ஆம் உட்பிரிவில், “அந்தத் தலைவர் அல்லது மன்ற உறுப்பினர் ஒருவர்” “அந்த தலைவர் அல்லது மன்ற உறுப்பினர் எவரும்” மற்றும் “அத்தகைய தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்” என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக “மன்ற உறுப்பினர் ஒருவர், மன்ற உறுப்பினர் எவரும்” மற்றும் “அத்தகைய மன்ற உறுப்பினர்'' என்ற சொற்றொடர் முறையே அமைக்கப்படுதல் வேண்டும்.

(3) (3) ஆம் உட்பிரிவில், “தலைவர் அல்லது அந்த மன்ற உறுப்பினர்” என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக “மன்ற உறுப்பினர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

368 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**19.** முதன்மைச் சட்டத்தின் **368** ஆம் பிரிவில்.-

**(1)** **(2)** ஆம் உட்பிரிவில், “தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள்” என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக “மன்ற உறுப்பினர்கள்” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

**(2)** **(5)** ஆம் உட்பிரிவில், “தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள்” என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக “மன்ற உறுப்பினர்கள்” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

**(3) (6)** ஆம் உட்பிரிவில், “தலைவர் அல்லது மன்ற உறுப்பினர்கள்” என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக “மன்ற உறுப்பினர்கள்” என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சு.ச. பூவலிங்கம்,**
*அரசுச் செயலாளர் (பொறுப்பு),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**க. நரசிம்மன்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப் பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2016ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண் 13/2016**

## தமிழ்நாடு மாநிலத்தில் மாநகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக.—

பகுதி—I.

**முன்னுரை**

**1.** **(1)** இந்தச் சட்டம், 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**(2)** இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பகுதி—II.

### 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்

தமிழ்நாடு சட்டம் 15/1971.

**2.** (இதன் பின்பு இந்தப் பகுதியில் 1971ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 97-ஆம் பிரிவில்,- 97ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(i) கூறு (f)-ல் ''ஒரு கோடி ரூபாய்க்கு மிகாமல்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மிகாமல்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) கூறு (g)—ல் ''ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படுகிறபோது'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மேற்படுகிறபோது'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

**3.** 1971 ஆம் ஆண்டு சட்டத்தின் 98ஆம் பிரிவில், (2)—ம் உட்பிரிவில் உள்ள கூறு (a)—ல் ''ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படுகிறபோது'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மேற்படுகிறபோது'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும். 98ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**4.** 1971 ஆம் ஆண்டு சட்டத்தின் 99ஆம் பிரிவில் உள்ள (2)—ம் உட்பிரிவில்,— 99—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(i) கூறு (f)-ல் ''ஒரு கோடி ரூபாய்க்கு மிகாமல்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மிகாமல்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) கூறு (g)—ல் ''ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படுகிறபோது'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மேற்படுகிறபோது'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

பகுதி—III.

### 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்

தமிழ்நாடு சட்டம் 25/1981.

**5.** (இதன் பின்பு இந்தப் பகுதியில் 1981ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1981-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் 99-ஆம் பிரிவில்,- 99ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(i) கூறு (f)-ல் ''ஒரு கோடி ரூபாய்க்கு மிகாமல்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மிகாமல்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) கூறு (g)—ல் ''ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படுகிறபோது'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மேற்படுகிறபோது'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

100ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**6. 1981** ஆம் ஆண்டு சட்டத்தின் **100**ஆம் பிரிவில் **(2)** ஆம் உட்பிரிவில் உள்ள கூறு (a)–ல் "ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படுகிறபோது" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மேற்படுகிறபோது" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

101ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**7. 1981** ஆம் ஆண்டு சட்டத்தின் **101**ஆம் பிரிவில் உள்ள **(2)** ஆம் உட்பிரிவில்,–

(i) கூறு (f)-ல் "ஒரு கோடி ரூபாய்க்கு மிகாமல்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மிகாமல்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) கூறு (g)–ல் "ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படுகிறபோது" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மேற்படுகிறபோது" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சு.ச. பூவலிங்கம்,**
*அரசுச் செயலாளர் (பொறுப்பு),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**க. நரசிம்மன்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2016ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண் 15/2016**

**2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. இந்தச் சட்டம், 2016ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு.

தமிழ்நாடு சட்டம் 16/2003.

2. 2003ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தின் 4–ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், 4–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(a) எனும் கூறில், ''2016ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் தேதி அன்று ஐந்து விழுக்காட்டளவிற்கு மேற்படாமல் 2016–2017 ஆம் ஆண்டு வருவாய்ப் பற்றாக்குறையை அறவே நீக்குவதோடு'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''2019ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் தேதி அன்று ஐந்து விழுக்காட்டளவிற்கு மேற்படாமல் 2019–2020 ஆம் ஆண்டு வருவாய்ப் பற்றாக்குறையை அறவே நீக்குவதோடு'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சு.ச. பூவலிங்கம்,**
*அரசுச் செயலாளர் (பொறுப்பு),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**க. நரசிம்மன்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2016ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண் 16/2016**

**2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** **(1)** இந்தச் சட்டம், 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலை கழகத் (திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும்.

**(2)** மாநில அரசால், அறிவிக்கையினால் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/2013.

11ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் என்று குறிப்பிடப்படுவதான) 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 11 ஆம் பிரிவில் உட்பிரிவு (2) இல் "அரசின் நியமனம் செய்யப் பெற்றவர்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "வேந்தரின் நியமனம் செய்யப் பெற்றவர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

13ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவில் (1) ஆம் உட்பிரிவில் (a)கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(a) பதிவாளர் என்னும் பதவியிலிருப்பவர் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் ஒருவரின் தகுதிக்குக் குறையாமல் இருக்கின்ற நபர் ஒருவராக இருத்தல் வேண்டும். பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் கிடைக்கப் பெறாமல் இருக்கிறதென்றால் அதன் பின்பு பல்கலைக் கழகத்தின் அல்லது கல்லூரியின் இணைப் பேராசிரியராக இருப்பவர் அல்லது அரசு துணைச் செயலாளர் பதவியின் தரத்திற்குக் குறையாத அரசின் அலுவலர் ஒருவர் பதிவாளராக பதவியமர்த்தம் செய்யப்படலாம்".

19ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**4.** முதன்மைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில் "பிரிவு II–பிற உறுப்பினர்கள்" என்கின்ற தலைப்பின் கீழ் (d) இனத்திற்குப் பிறகு பின்வரும் இனம் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"(e) இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள கல்லூரிகள் தவிர பிற இணைக்கப்பட்டக் கல்லூரிகளுக்குள்ளிருந்து துணை வேந்தரால் இரண்டு முதல்வர்கள் நியமனம் செய்யப்படுவர்".

22ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில் "பிரிவு-I – பதவி வழி உறுப்பினர்கள்" என்கின்ற தலைப்பின் கீழ் (g) இனத்திற்குப் பின்பு பின்வரும் இனம் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"(h) திருச்சிராப்பள்ளியிலுள்ள கலைக்காவேரி நுண்கலைக் கல்லூரியின் முதல்வர்"

55ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**6.** முதன்மைச் சட்டத்தின் 55 ஆம் பிரிவில்;-

(1) (1) ஆம் உட்பிரிவிற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவு சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"(1) (2) முதல் (6) ஆம் உட்பிரிவுகளின் வகைமுறைகளுக்குட்பட்டு, இதன் பின்பு இந்தப் பிரிவில் பல்கலைக் கழகச் சட்டங்கள் என சுட்டப்படுவதான 1923 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் VII/1923) 1965 ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 33/1965) மற்றும் 1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1982) அன்று மற்றும் குறித்திட்ட தேதியிலிருந்து செல்திறத்துடன் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள கல்லூரிகள் தொடர்பாக பொருந்துவது அற்றுப் போகும்.

**விளக்கம்:- (1)** ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக "குறித்திட்ட நாள்" என்பது, -

(a) இணைப்புப் பட்டியலின் பகுதி – I இல் குறித்துரைக்கப்பட்டுள்ள கல்லூரிகள் தொடர்பாக இயன்ற அளவிற்கு குறித்திட்ட தேதி என்பது 1 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்படி உள்ளதாக இருக்கும்;

(b) இணைப்புப் பட்டியலின் பகுதி–II இல் குறித்துரைக்கப்பட்டுள்ள கல்லூரிகள் தொடர்பாக இயன்ற அளவிற்கு 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகத் (திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதியானது இருக்கும்";

**(2)** **(4)** ஆம் உட்பிரிவில் ஆறு இடங்களில் வரும் "சென்னைப் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "சென்னைப் பல்லைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் அல்லது பாரதிதாசன் பல்கலைக் கழகம்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

**(3)** **(5)** ஆம் உட்பிரிவில் இரண்டு இடங்களில் வரும் "சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகம்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகம்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

57–ஆம் பிரிவிற்கான நீக்கம்.

**7.** முதன்மைச் சட்டத்தின் 57 ஆம் பிரிவு விட்டுவிடப்படுதல் வேண்டும்.

இணைப்புப் பட்டியலை மாற்றாக அமைதல்.

**8.** இணைப்புப் பட்டியலுக்காக பின்வரும் இணைப்புப் பட்டியல் அமைக்கப்படுதல் வேண்டும்:-

"இணைப்புப் பட்டியல்

[1 (3), 6 மற்றும் 55 ஆம் பிரிவுகளைக் காண்க]

**பகுதி-1**

1. தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, சென்னை.
2. தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, மதுரை.
3. தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, திருவையாறு.
4. தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, கோயம்புத்தூர்.
5. அரசு கவின் கலைக்கல்லூரி, சென்னை.
6. அரசு கவின் கலைக்கல்லூரி, கும்பகோணம்.
7. அரசினர் கட்டட மற்றும் சிற்பக் கல்லூரி, மாமல்லபுரம்.
8. கலைக் காவேரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

**பகுதி –II**

1. தமிழ் இசைக்கல்லூரி, இராஜா அண்ணாமலைமன்றம், சென்னை.
2. சத்குரு சங்கீத வித்யாலயம், மதுரை."

(ஆளுநரின் ஆணைப்படி)

**சு.ச. பூவலிங்கம்,**
*அரசுச் செயலாளர் (பொறுப்பு),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**க. நரசிம்மன்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.